

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (24.12.2024) முகாம் அலுவலகத்தில், கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி கிறிஸ்துவ திருச்சபைகளின் அருட்சகோதரிகள் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் உள்ளனர்

முதலமைச்சருக்கு இந்தக் கைத்தடியை நினைவுப் பரிசாக அளிக்கிறோம்!

# எல்லா தடைகளையும் தகர்ப்போம் என்பதற்கான நினைவுப் பரிசுதான் இது!

## தந்தை பெரியார் நினைவு நாளில் - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி எழுச்சியுரை!



சென்னை, டிச. 26 -

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தந்தை பெரியார் 51 ஆம் ஆண்டு நினைவு நாளில், முதலமைச்சர் அவர்களுக்குப் பெரியார் கைத்தடியை நினைவுப் பரிசாக அளிக்கிறோம்; இது எல்லா வகையான விலங்குகளையும், தடைகளையும் தகர்க்கும். உங்களுக்கு நாங்கள் துணை; எங்களுக்கு நீங்கள் துணை என்றார். நேற்று முன்தினம் (24.12.2024) காலை சென்னை பெரியார் திடலில் உள்ள நடிகவேள் எம்.ஆர்.இராதா மன்றத்தில் நடைபெற்ற தந்தை பெரியாரின் 51 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் உரையாற்றினார்.

அவரது உரை வருமாறு-

நடைபெறக் கூடிய இரு பெருங்குடும்பத்தினுடைய மிகப்பெரிய நிகழ்ச்சி இது! திராவிடம் என்பது மானிடப் பரப்பு! திராவிடம் என்பது ஒரு குறிப்பிட்ட எல்லையைச் சார்ந்தது அல்ல, சிலர் நினைப்பதைப்போல. திராவிடம் என்பது மானிடப் பரப்பு. யாருக்கெல்லாம் சுயமரியாதை தேவையோ, அத்தனை பேருக்கும் சுயமரியாதையைச் சொல்லிக் கொடுக்கின்ற தத்துவத்திற்குப் பெயர்தான் திராவிடம். அந்தத் திராவிடத்தைக் கட்டிக் காக்கின்ற எங்கள் ஆற்றல்மிகு முதலமைச்சர், ஒப்பற்ற முதலமைச்சர் அவர்களே! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர், பச்சைத் தமிழர் காமராசர் இவர்களைப் போன்றவர்கள் எல்லாம் இல்லையே என்று நினைக்கின்ற நேரத்தில், அத்துணையும் சேர்ந்து ஒரு கலவையாக, மிகச் சிறப்பாக ஆற்றல், ஆளுமைக்குமுன் எதிரிகள் சிதறி ஓடக்கூடிய அளவிற்கு இருக்கிறேன் என்று காட்டக்கூடிய எங்கள் ஒப்பற்ற மா முதலமைச்சர் அவர்களே, அருமைச் சகோதரர் அமைச்சர் துரை முருகன் அவர்களே, அமைச்சர் பெருமக்களே!

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்கின்ற இயக்கத் தோழர்களே! ஓர் அவசரமான நெருக்கடியான சூழ்நிலை! எப்பொழுதும் எங்களை நெருக்கடிதான் சந்திக்க வைக்கிறது. வெளியிலும் சரி, உள்ளேயும் சரி! அய்ம்பதாண்டுகளுக்கு முன்பும் நெருக்கடி; இப்போதும் அதே நெருக்கடி. ஆனால், நெருக்கடிகளில் வேறுபாடுகள் இருந்தாலும், சுருக்கமாகச் சொல்லுகிறேன். காணொலியில் கண்ட காட்சிகள்!

இங்கே நீங்களெல்லாம் பார்த்திருப்பீர்கள், ஏழு நிமிடக் காணொலி நிகழ்வை. அதைக்கூட எந்த நெருக்கடியாக இருந்தாலும், இதை ஏற்பாடு செய்தவர்களை உற்சாகப் படுத்த வேண்டும் என்பதற்காக ஒளிப்பரப்பினார்கள். நெருக்கடி காரணமாக, அதை நான் நிறுத்தி விட்டேன். மெதுவாக முதலமைச்சர் அவர்களிடம் சொன்னேன், "அவசரத்தைக் கருதி நிறுத்தினேன்" என்று.' "இல்லை, இல்லை, போடுங்கள்" என்று சொன்னார். அவர்தான் முதலமைச்சர் ஸ்டாலின் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்! அந்தச் செயல்திறனுக்கு எவ்வளவு சோதனைகள் இருந்தாலும், சாதனைகள் தொடரவேண்டும் என்பது தான் அதனுடைய தத்துவம்! தந்தை பெரியார் நினைவு நாளில் பங்கேற்க வந்துள்ள முதலமைச்சர் அவர்களே, இயக்கப் பெரியோர்களே, கழகக் குடும்பத்தவர்களே, ஏனைய நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தந்தை பெரியார் உடலால் மறைந்து 51 ஆண்டுகள் ஓடிவிட்டன! இனிமேல் இந்த இயக்கம் இல்லை என்று நினைத்தார்கள். அண்ணா மறைந்த பொழுது சொன்னார்கள், அய்யா காப்பாற்றினார். கலைஞரைப் பொறுப்பேற்கச் சொன்னார்; கலைஞர் பொறுப்பேற்று வரலாற்றைப் படைத்தார்.

### வெற்றிடமல்ல கற்றிடம்!

அதற்கடுத்து, கலைஞர் மறைந்தபொழுது, வெற்றிடம் என்று சொன்னார்கள். அடப் புரியாதவர்களே, வெற்றிடமல்ல, இதோ கற்றிடம் என்று உலகத்திற்குச் சொல்லிக் கொடுக்கக் கூடிய ஒருவர் தயாராக இருக்கிறார் என்று சொன்ன இடம், இந்தத் தாய்வீடு. அந்தத் தாய்வீட்டிற்கு வந்திருக்கிறார் நமது முதலமைச்சர். தோளோடு தோள் நின்று என்றைக்கும் இருக்கக்கூடியவர்கள், பதவி இருந்தாலும், பதவி இல்லாவிட்டாலும், அவருடைய மக்களின் இதயசிம்மாசனம் இருக்கிறதே, அதை யாராலும் பறிக்க முடியாது.

மன்னர் ஆட்சி என்கிறார்கள் சிலர்! ஆம், மன்னர்தான்! அவருடைய ஆட்சி மன்னர் ஆட்சிதான்; ஒரே ஒரு சிறிய வித்தியாசம். என்ன வித்தியாசம் தெரியுமா?

மாதம் மும்மாரி பொழிகிறதா? என்று கேட்ட மன்ன ராட்சி அல்ல. மும்மாரி பொழிவதற்கு முன்பாகவே, எம்மாதிரி வேலை செய்யவேண்டும் என்று சொல்லக்கூடிய, ஆயத்தப்படுத்தக் கூடிய முதலமைச்சர் எங்கள் முதலமைச்சர்!

அதுபோலவே, மனுமுறை தவறாமல் ஆட்சி நடக்கிறதா? என்று தெருக்கூத்தில்கூட வசனம் பேசினார்கள். மனுநீதிக்கு இங்கே இடமே இல்லை என்று காட்டக்கூடிய இந்த மண்ணுக்குரிய மன்னர்.

"விஸ்வகர்மா யோஜனா திட்டத்திற்கு இங்கே இடமில்லை. ஒன்றிய அரசே, படிப்பிலும், கல்வியிலும் கை வைக்காதே, நாங்கள் ஒரு கை பார்ப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறோம்" என்று சொல்லக்கூடிய முதுகெலும்பு உள்ள முதலமைச்சர், இந்தியாவிற்கே சுயமரியாதையைச் சொல்லிக் கொடுக்கக்கூடிய தமிழ்நாட்டு முதலமைச்சர் இவர்தான்!

அப்படிப்பட்ட நீங்கள் இங்கே வந்திருப்பது, ஒரு பக்கம் ஆறுதல்; இன்னொரு பக்கம் மிகப்பெரிய ஒரு வாய்ப்பு. அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. எல்லோருடைய உள்ளங்களிலும் துணை இருக்கிறது. இந்த ஆட்சிக்கு, கொள்கைக்கு! நாங்கள் உங்களுக்குத் துணை; எங்களுக்கு நீங்கள் துணை.

### நாங்கள் முன்னணிப் படையினர்!

நாங்கள் பாதை போட்டுக் கொண்டு போவோம், அண்ணா ''சேப்பர்ஸ் அன்ட் மைனர்ஸ்'' என்று சொன்னார்கள். அதைச் செய்வதற்குத்தான் இந்தக் கருஞ்சட்டைப் பட்டாளமும். இரட்டைக் குழல் துப்பாக்கி வெடிப்பதற்கு என்றைக்கும் தயாராக இருக்கிறது என்பதைப் பார்த்தீர்கள்.

நீங்கள் இங்கே வந்திருப்பது, உங்களை வரவேற்பது இது வெறும் அமைப்பல்ல சம்பிரதாயம் அல்ல பெரியார் திடல் அல்ல மூலிகைப் பண்ணைக்கு வந்திருக்கிறீர்கள்.

கலைஞர் சொன்னார், "பாம்பு கடித்த நேரத்தில் எல்லாம், பச்சிலை மூலிகை பெரியார் திடலில்தான் கிடைக்கும் என்பதால், நான் அங்கே சென்று புரண்டு, புரண்டு திரும்புவேன்" என்று.

அவர் சொன்னதுபோல், பெரியார்திடல் ஒரு மூலிகைப் பண்ணை! அதிகம் சொல்லவேண்டிய அவசியமில்லை. நெஞ்சம் நிறைந்திருக்கிறது. திட்டங்கள் வேகமாக நிறைவேறு கின்றன. ஒரு நூற்றாண்டு அதில் 25 ஆண்டுகாலம் தி.மு.க. ஆட்சியைப் பெற்றிருக்கிறது.

சில நாள்களுக்கு முன்பு நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நீங்கள் ஆற்றிய உரையைக் கேட்டு, நாங்கள் மகிழ்ந்தோம். ஒரு புதிய நம்பிக்கைப் பிறந்தது!

எதையெல்லாம் பாடமாகச் சொல்லிக் கொடுக்க முடியுமோ, அவற்றையெல்லாம் ஒரு இயக்கத் தலைவர், தன்னுடைய இயக்கத் தோழர்களுக்குப் பாடமாகச் சொல்லிக் கொடுத்தீர்கள்.

### தி.மு.க.தான் ஆட்சியில் தொடர்ந்து இருக்கும்!

அதில் நீங்கள் சொன்னீர்கள், "நூறாண்டு காணுகின்ற நேரத்திலும் தி.மு.க. பதவியில் இருக்கவேண்டும்" என்று சொன்னீர்கள். தி.மு.க.தான் ஆட்சியில் இருக்கும், நீடிக்கும்! மக்களைத் தயாரிப்பதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம். அது தனி மனிதர்களுடைய பதவிக்காக அல்ல; அலங்காரத்திற்காக அல்ல.

இந்த சமுதாயத்தினுடைய மான வாழ்வு காப்பாற்றப்படுவதற்காக சூத்திரப் பட்டமும், பஞ்சமப் பட்டமும் ஒழிவதற்காக, ஜாதி, பெண்ணடிமை, மூடநம்பிக்கைகளை ஒழிப்பதற்காக அது ஆட்சியில் இருக்கவேண்டும். தந்தை பெரியார் அவர்கள் மறைந்தபொழுது, இத்தோடு இயக்கம் இருக்காது என்று சொன்னார்கள். இயக்கம் இருக்கிறது என்பது மட்டும் முக்கியமல்ல. மேலும் வலிமையாக இருக்கிறது. நண்பர்களே, இவர் இருக்கிறார், இந்த ஆட்சி இருக்கிறது. "பெரியார் உலகமயம் உலகம் பெரியார் மயம்!" என்று சொல்லக்கூடிய அளவிற்குக் காரியங்கள் நடைபெறுகின்றன.

### 21 மொழிகளில் தந்தை பெரியார்!

21 மொழிகளிலே பெரியார் சென்றிருக்கின்றார் என்று சொன்னால், இதோ அந்தக் கைகள்தான் அதற்கான கையெழுத்துப் போட்ட கைகள்தான் நம் முதலமைச்சரின் கைகள், அவை சாதாரண கைகள் அல்ல!நெருக்கடி காலத்தில் தளபதி ஸ்டாலின் அவர்களை அடித்து, உதைத்து சிறைச்சாலையில் தள்ளிய பொழுது, இந்தக் கரம்தான், அந்த ரத்தத்தைத் துடைத்தது. எங்கள் உறவு என்பது பதவியினால் வரக்கூடிய உறவு அல்ல.

சில பைத்தியக்காரர்கள் புரியாமல் கேட்கிறார்கள், முதலமைச்சர், பெரியார் திடலுக்கு ஏன் போகிறார்? என்று.அவர்களைப் பார்த்துக் கேட்கிறோம், இது தான் தாய்வீடு மூலிகைப் பண்ணை இங்கே இருக்கிறது. வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவினை மிகப்பெரிய வெற்றிவிழாவாக நடத்தியமைக்காக அவருக்கு நினைவுச் சின்னமாக ஒன்றை அளிக்க விருக்கின்றோம்.

அது என்ன நினைவுச் சின்னம் தெரியுமா நண்பர்களே?

இங்கே இருப்பவர்கள் மட்டுமல்ல, வெளியிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பவர்கள் மட்டுமல்ல, இணைய தளம் மூலமாக உலகம் முழுவதும் இருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். தாய்வீடு தரக்கூடிய மிகப்பெரிய நினைவுச் சின்னம் பெரியார் அவர்கள் உடலால் மறைந்து 51 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த இயக்கம் சமூகப் புரட்சி இயக்கமான, தாய்க் கழகமான திராவிடர் கழகம், அதன் சேய்க் கழகமான திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பு அரசியல் ரீதியாக சாதனைகளுக்குமேல் சாதனை செய்து சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கின்றது.

உங்களை வரவேற்கின்ற நேரத்தில், இந்த நிகழ்ச்சி முடிந்து நீங்கள் செல்லுகின்ற நேரத்தில், இன்னும் தைரியத்தோடு, இன்னும் துணிவோடு, களமாடக் கூடிய முதலமைச்சராக நீங்கள் இருக்கின்ற காரணத்தினால், இதோ உங்களுக்கு ஒரு பேராயுதத்தை அளிக்க விருக்கின்றோம்.

நீங்கள் எப்பொழுதுமே வன்முறையில் நம்பிக்கை இல்லாதவர்கள்; நாமும் வன்முறையில் நம்பிக்கை இல்லாதவர்கள்தான்! இதோ ஒரு கைத்தடி நினைவுப் பரிசு!

ஆனால், கருத்து களம் போராட்டம் சட்டம் இவற்றின்மூலமாக மிகப் பெரிய அளவிற்குச் சாதித்து இருக்கிறீர்கள். அந்த ஆயுதம் இதோ அனைவர் சார்பாக, உலக மக்கள் சார்பாக, தமிழர்கள் சார்பாக, திராவிட மக்கள் மட்டுமல்ல, மனித உரிமைக்காக எப்படி வைக்கத்தில் மனித உரிமைப் போராட்டம் நடந்ததோ அதேபோல இருக்கக் கூடிய அனைவரின் சார்பாக இன்றைக்கு அளிக்கிறேன்.

### இதோ அந்தப் பரிசைக் கொடுக்கிறோம்!

பரிசுகள் சில நேரங்களில் மென்மையாக இருக்கும். இந்தப் பரிசு வன்மையாகவும் இருக்காது; மென்மை யாகவும் இருக்காது. மிகப்பெரிய அளவிற்குப் புதுமை யாக இருக்கும். ஆனால், தேவையானதாக இருக்கும். அனைவரின் சார்பாக, பெரிய வாய்ப்பாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கிறோம். இது தான் சரியான ஆயுதம்! பெரியாரின் கைத்தடி! அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்வோம்!

இந்தக் கைத்தடி இந்த ஆட்சிக்கு மட்டுமல்ல என்றைக்கும் திராவிடத்தைக் காக்கின்ற தந்தை பெரியாரின் கைத்தடியாக இருக்கும். விலங்குகள் எங்கிருந்தாலும்அ வற்றை தகர்ப்போம்! சற்றுநேரத்திற்கு முன்பு காணொலியில் பார்த்தீர்கள், விலங்குகள் எங்கு இருந்தாலும், அந்த விலங்கைத் தகர்ப்பது முக்கிய கடமையாகும்.

விலங்குகளில் இரண்டு வகை உண்டு. இரும்பிலும் உண்டு; மனிதர்களிடத்திலும் உண்டு. அவற்றை இந்தக் கைத்தடி தகர்க்கும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் உரையாற்றினார்.



## சிவகங்கை அரசி வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின்

## 228வது நினைவு தினம் 25.12.2024

சிவகங்கை அரசி வீரமங்கை ராணி வேலுநாச்சியார் அவர்களுக்கு சென்னை காந்தி மண்டபத்தில் சிலை அமைத்திடவும், அதற்காக ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கி சட்டமன்றத்தில் அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி, நன்றி, நன்றி...

இராமநாதபுரம் இராஜ்ஜியத்திலிருந்து புதுக்கோட்டை சமஸ்தானமாகவும் மீதமுள்ள இராமநாதபுர சமஸ்தானத்தில் இருந்து சிவகங்கை அரசர் சசிவர்னருக்கு அகிலாண்டேஸ்வரி நாச்சியாரை மணமுடித்து கொடுத்து, ஐந்தில் இரண்டு பங்கு நிலபரப்பையும் கோவில்களையும், சத்திரங்களையும், கடலோர பட்டிணங்களையும் பிரித்துக் கொடுத்து, சிவகங்கை சமஸ்தானம் உருவாக்கப்பட்டது. (Manvel of Ramnad)

இராமநாதபுரம் சமஸ்தானத்திலிருந்து அனைத்து போர்ப்பயிற்சிகளையும், அரசு நிர்வாகப் போர் பயிற்சிகளையும், பன்மொழிகளையும், கற்றுத்தேர்ந்த இராமநாதபுரம் இளவரசி வேலுநாச்சியார், சிவகங்கை அரசர் ராஜா விஜயரகுநாத பெருவுடையார் (1730-1750) சசிவர்னர் அவர்களது மகனும், தனது அத்தை மகனுமான சிவகங்கை இளவரசர் முத்துவடுகநாதரை மணந்து சிவகங்கையின் அரசி ஆனார். (1891, P.241) & History of Madras.

சிவகங்கை சமஸ்தான அரசர், சசிவர்னர் தான் ஆண்ட 20 ஆண்டு கால ஆட்சியில் அவரை எவரும் வென்றதில்லை. அடுத்து அவரது மகன் வேலுநாச்சியாரின் கணவர் அரசர், முத்துவடுகநாதர் தனது 22 வருட ஆட்சி காலத்தில் எவரிடமும் பின் வாங்கியதில்லை.

கும்பினியரின் குனிதலைக் கூட்டாளி, ஆற்காடு நவாப், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை இராஜ்யங்கள் தனது கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்று கூறிய கட்டுக்கதையை நம்பாமல் சென்னை மாகாண கவர்னர் (ரவி அல்ல) ஜோசையாடுப்ரே அவர்கள் இது பற்றி அறிய வர்ன் ஹேஸ்டிங் மற்றும் சாமுவேல் ஆர்டலி ஆகியோர்களை கொண்ட செலக்ட் கமிட்டியை அமைத்து அறிக்கை கேட்டார் 03.04.1771 அன்று அவர்கள் தந்த அறிக்கைகளால் இராமநாதபுரம் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை ஆகிய ஆங்கிலேயரைக் கொண்ட மூன்று இராஜ்ஜியங்கள் எப்போதும் எந்த ஆதிக்க சக்திகளுக்கும் கட்டுப்படாத எக்காலத்திலும் எவருக்கும் தலைகுனியாத, கப்பம் செலுத்தாத தனிகுடியரசு, முடியரசுகள்.

03.04.1771 அறிக்கைக்குப்பின் சிவகங்கை அரசர் முத்துவடுகநாதரை போரிட்டு வெல்ல முடியாது என்பதால் அவரிடம் சமாதானமாகச் சென்றுவிடுவோம் என்று ஆங்கிலேய கவர்னர் உத்தரவு போடுகிறார். அதன்படி சிவகங்கை அரசர் தங்களின் ஆக்கிரமிப்பில் உள்ள தஞ்சைக்கு, உரிமைப்பட்ட அனுமந்தக்குடி பகுதியின் ஆக்கிரமிப்பை அகற்றிக்கொள்ள வேண்டும். தஞ்சையிலிருந்து மிரண்டு ஓடிவந்து, சிவகங்கை சீமைக்குள் நுழைந்து, மன்னரால் கட்டி வைக்கப்பட்டுள்ள 6 யானைகளை விடுவிக்க வேண்டும் என்றும், இதை செய்தால் இனிமேல் போர் தொடுத்து வரமாட்டோம் என்றும், தொண்டி போன்ற கடல் பட்டிணங்களுக்குள் வரும் கல்வி நிறுவனப் பாதிரியார்களையும், கப்பல் வழியாக வரும் வணிகர்களையும் அனுமதி வேண்டும் என்ற கோரிக்கைகள் வைக்கப்பட்டது. சிவகங்கை அரசரால் அவை ஏற்கப்பட்டது. அதற்கான சமாதான ஒப்பந்தம் இருவராலும் ஏற்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது.

சமரச ஒப்பந்தத்தால் ஆதங்கப்பட்ட ஆத்திரமடைந்த ஆங்கிலேயரின் அடிவருடி ஆற்கரடு நவாப் ஆத்திரமடைந்தார். ஆற்காடு நவாப்பின் மகன் உமதத்துல் உம்ரா 24000 பவுண்ட் மதிப்பிற்குச் சமமான 50,000 பக்கோடாக்களை, ஜெனரல் ஜோசப் ஸ்மித் மற்றும் லெப்ட்டினென்ட் கர்னல் பாஞ்சூர் ஆகிய இரண்டு அதிகாரிகளுக்கும் தருவது என்று ஒப்பந்தம் பேசி முடிவெடுத்தார். இலண்டன் இராணுவ கோர்ட் Military Consulation Vol. 42/1.7.1772.P;442 முத்துவடுகநாதரை பழிவாங்கும் நோக்கத்துடன் சமாதானத் தூது நடவடிக்கை ஓலை தங்களிடம் வந்து சேரவில்லை என்று பொய் சொல்லி விடுவோம் என மூவரும் திட்டமிட்டனர். திருச்சியிலிருந்து தளபதி ஜெனரல் ஜோசப் ஸ்மித் மற்றும் நவாப்பின் மகன் உமதத்துல் உம்ரா கூட்டுத் தலைமையிலும் மதுரையில் இருந்து லெப்ட்டினென்ட கர்னல் பாஞ்சூர் தலைமையிலும் பீரங்கி வெடிகுண்டு மற்றும் துப்பாக்கி இப்படை வீரர்களுடன் காளையார் கோவிலைத் தாக்குகின்றனர் (Love H.D. - Vestiges of old Madra vol. (III) P.71) சமாதான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலகட்டத்தில் பாதுகாப்புப் படைகளையெல்லாம் அனுப்பிவிட்டு அரசர் அமைதியாக ஆலயத்திற்குள் வழிபாட்டு பணிகளை மேற்கொண்டார். அத்தருணத்தில் ஆங்கிலேய படைகள் தாக்க வந்துள்ளனர் என்ற செய்தியை அரசரிடம் கூறினர். அவர் அதை நம்பவில்லை. சமாதான துது உடன்படிக்கை உள்ள காலக்கட்டத்தில் ஆங்கிலேய படைகள் வரவாய்ப்புகள் இல்லையே என்றார். இருந்தாலும் ஆரவார ஓசைகளைக் கேட்டு உறுவிய வாளுடன் வெளிவந்த அரசர் முத்துவடுகநாதரைத் அவர் எதிர்பாராத நிலையில் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர் (The London Packet Dt.2.3.1774.) and சமாதான உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும் காலத்தில் ஆங்கிலேயப்படை வீரர்களின் துப்பாக்கி குண்டுகள் மன்னர் மீது பாய்ந்து அரசர் முத்துவடுகநாதர் இறந்துவிட்டார் Military Vol. 42/July 1772.P; 607.) என்ற செய்தியைப் பரப்பி சிவகங்கையைக் கைப்பற்ற பாஞ்சூரின் படைகள் தலைநகர் சிவகங்கையை நோக்கிப் பறந்தன. மன்னர் சுடப்பட்ட செய்தியை ஒற்றர்கள் மூலம் கேட்டு சக்கந்தியில் இருந்த இராணி வேலுநாச்சியார் தன் மகள் வெள்ளச்சி நாச்சியாரை அழைத்துக் கொண்டு குதிரையில் ஏறி மின்னலெனப் பாய்ந்து காளையார் கோவில் வந்து சேர்ந்தார். குற்றுயிராய் இருந்த தன்குல நாயகர் அரசர் முத்துவடுக நாதரைத் தன் மடியில் கிடத்தினார். உயிர் பிரியும் தருவாயில் இருந்த மன்னர் தன் மனைவி வேலுநாச்சியாரிடம் உன் மாங்கல்யத்தைக் கழற்றாதே. உன் மங்களக் குங்குமத்தை அழிக்காதே. ஆங்கிலேய ஆட்சியின் எதிர்ப்பு அணியின் தலைவர், மைசூர் அரசர் ஹைதர் அலியிடமும், அவரது மகன் திப்பு சுல்தானிடமும், நானும், நமது தளவாள் பிரதானியும் அமைச்சருமான தாண்டவராயன் பிள்ளை அவர்களும் திருப்பாசசி கோபால் நாயக்கரை வைத்துப் பேசி இருக்கிறோம். நம்மிடம் இல்லாத துப்பாக்கிகள், குண்டுகள், பீரங்கிகள், படைகளை நமக்குக் கொடுத்து உதவுகிறோம் என்று ஹைதர் அலி உறுதி அளித்துள்ளார்கள். நீ நேரடியாக அங்கு சென்று அவற்றை வணங்கி அவற்றின் படைகளின் உதவியுடன் ஆங்கிலேயரை விரட்டியடித்து மீண்டும் சிவகங்கையை மீட்க வேண்டும் என்று கூறினார். அதன்பின் முத்துவடுகநாதரின் உயிர் பிரிகிறது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஆங்கிலேயரால் சுட்டு வீழ்த்தப்பட்டு உயிர்நீத்த முதல் தியாகி சிவகங்கை மன்னர் முத்துவடுக நாதரே ஆவார். (The British Chronicle Dt. 3.5.1774.).

ஆங்கிலேயர்கள் பாஞ்சூர் தலைமையில் எட்டாண்டுகள் ஆட்சியில் புரிந்தனர். வேலு நாச்சியார் அந்த எட்டாண்டுகளில் வெளியில் இருந்து படைகளையும், மக்களையும், மாதர் படைகளையும் திரட்டி ஆங்கிலேயரை விரட்டி ஆட்சியைப் பிடித்தார். சிவகங்கை இளவரசியாக வெள்ளச்சி நாச்சியாருக்கு பட்டம் சூட்டி சிவகங்கையின் அரசியாக வேலுநாச்சியார் 16 ஆண்டு காலம் (1780-1796) ஆட்சிபுரிந்தார். திராவிட மங்கை, மகளிர் அரசியார் அவர்களின் ஆளுமையை ஆராதிக்கும் வண்ணம், திராவிட மாடல் ஆட்சியில், தமிழச்சி அரசி வீரமங்கை வேலுநாச்சியாருக்கு சென்னை காந்தி மண்டபத்தில் சிலை அமைத்திடவும், அதற்காக ரூ.50 லட்சம் நிதியும் ஒதுக்கி சட்டமன்றத்தில் அறிவிப்பு செய்த மாண்புமிகு கழகத் தலைவர்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# மு.க.ஸ்டாலின்

அவர்களுக்கு நன்றி ! நன்றி!! நன்றி !!!

228வது நினைவு தினத்தில் நன்றிகளைக் காணிக்கையாக்கும்

வீரமங்கை வேலு நாச்சியாரின் வழித்தோன்றல்கள்

முனைவர் பிரபா நாச்சியார், Er. ஜெயஸ்ரீ நாச்சியார், Dr. மோகனா நாச்சியார், சங்கீதா நாச்சியார் USA.

இவர்களுடன்

# அக்ரி கணேசன்

கழக தீர்மானக் குழுச் செயலாளர்

சித்தனேந்தல் கிராமம், காரியாபட்டி ஒன்றியம், இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி.